லாபமாகத்தான் இருக்கின்றன. ஒவ்வொரு விதைப் பண்ணையிலும் இன்றைக்கு அதிகமான லாபம் அரசாங்கம் பெற்றிருக்கிறது. இதிலிருந்து அதிகப்படியான லாபம் பெற்றிருக்கிறோம் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் இருக்கிற கண்ணம்பாளையத்தில் இருக்கின்ற விதைப் பண்ணைக்கு தண்ணீர் பற்றுக்குறை இருக்கிறது. கண்ணம்பாளையக் குளத்திலிருந்து ஒரு கால்வாய் வெட்டுவதற்கு தீர்மானம் இருந்தது. அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இல்லை. இது குறித்து இப்போது தகவல் இல்லை. கண்ணம்பாளையம் விதைப் பண்ணையில் இருந்து 7,428 ரூபாய் லாபம் வந்திருப்பதாக 1968–69 ஆண்டு கணக்குக் காட்டுகிறது. தனியாக கால்வாய் அபிவிருத்தி பற்றி எந்தவித குறிப்பும் இல்லை.

ஆடுதுறை விவசாயப் பண்ணைக் கட்டடங்கள்.

*218 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

ஆடுதுறையில் தற்போது காலியாக உள்ள அரசாங்க விவசாயப் பண்ணைக் கட்டடங்களை சுற்றுலா மாளிகையாக ஆக்க ஏதேனும் திட்டம் தற்போது அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:

ஆடுதுறையிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது எந்தக் கட்டிடமும் காலியாக இல்லை. அங்குள்ள கட்டடத்தைச் சுற்றுலா மாளிகையாக்கும் திட்டம் தற்போது இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன்: ஆடுதுறையிலே விதைப்பண்ணைகளுக்கு கட்டடம் கட்டுவதாகச் சொன்னார்கள். கட்டடம் கட்டிவிட்டால் மட்டும் போதாது. கட்டடம் கட்டிய பிறகு விதைகளில் கலப்பு இருப்பதைப் பிரிக்கக்கூடிய கருவியும் இருக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து. இது ஆடுதுறை விதைப் பண்ணையைப்பற்றிய கேள்வியல்ல. கோவை மாவட்ட விதைப்பண்ணையைப் பற்றியது. கேள்விக்கு ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். ஆடுதுறை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்த கட்டடத்தை சுற்றுலா மாளிகையாக ஆக்க வேண்டுமென்ற திட்டம் உண்டா என்று கேட்டார்கள். இல்லை என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. எல். கணேசன் : ஆடுதுறை விதைப்பண்ணையை மேல் நாட்டு மாணவர்களும், அண்டை மாநிலங்களில் உள்ள மாணவர்களும் வேளாண்மைத் துறையைப் பற்றி ஆராய்வதற்காக அடிக்கடி வந்து

கொண்டிருக்கிற காரணத்தாலே அந்த இடத்தின் முக்கியத்து வத்தைக் கருதி இனிமேலாவது அதைச் சுற்றுலா மாளிகையாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏற்கனவே இருக்கிற மாளிகையை மேலும் புதுப்பிப்பதற்காக பொதுப் பணித் துறையில் இருந்து 22 ஆயிரம் ரூபாய் செலவழித்து அதை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதனல் இன்னும் அதிகம் வந்து தங்குவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. அ. மாரிமுத்து: தலைவர் அவர்களே, ஆடுதுறையிலுள்ள உயர்தர ரக நெல் விதைகளை அளிக்கக்கூடிய சக்தி வாய்ந்த இந்த விவசாய ஆராய்ச்சிப் பண்ணைக்கு அருகில் நீண்டகாலமாகக் கல்லூரி ஒன்று கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை கவனிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட செயற் குறிப்பு எதுவும் இல்லை.

International Rest House at Yercaud.

* 219 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether any International Rest House has to be built at Yercaud in Salem district?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை. ஏர்க்காட்டில் குறைந்த வருவாய் உள்ள சுற்றுப் பயணிகளுக்கான ஓய்வு விடுதி ஒன்று கட்ட செயற்குறிப்பு உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: அந்த ஓய்வு இல்லத்திற்கு மொத்தம் என்ன செலவாகும்? எப்பொழுது கட்டி முடிக்கப்பட இருக்கிறது? அதேமாதிரியான ஓய்வு இல்லங்களை ஏர்க்காடு போன்ற உல்லாச பயணிகள் தங்குகின்ற இடங்களிலேயும் கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கேள்வி ஏர்க்காடு பற்றியதுதான். ஏற்கனவே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டவேண்டுமென்று திட்டம் தீட்டினேம். நிதிக் குழுவினர் அதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டதற்கு இணங்க ஒரு லட்சத்து இரண்டாயிரம் என்று குறைத்து அந்த அளவிலே கட்டவேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். பொதுப் பணித் துறை பொறியியல் வல்லுநர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார் கள், இன்னும் திட்டம் தரப்படவில்லை. வந்த பிறகு அந்த அளவிலே ஒரு மாளிகை அங்கே கட்டப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, கட்டடங்கள் கட்டுவதற்குக் காரணம் மற்ற நாடுகளிலிருந்து பயணிகள் வந்தால் தங்குவதற்குக் கட்டப்படுகிறது. அப்படியானல் மத்திய சர்க்காரிட மிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ உதவி பெற்றுச் செய் வதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?